[1994 மே 5

மத்திய அரசு அனுமதி அளித்துவிட்டதா? மேலும் அதை அமைப்பதற்கு சர்வதேச நிதி நிறுவனங்களின் நிதி உதவியும், உலக வங்கி மற்றும் யு.என்.டி.பி. என்ற ஐக்கிய நாடுகள் அமைப்பினுடைய சுற்றுச் சூழல் திட்டம் ஆகியவற்றின் உதவிகளை இந்த மையம் பெற்றுள்ளதா என்பதையும் அந்த மையத்தின் நோக்கம் என்ன, என்னென்ன ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன. அந்த ஆய்வுப் பணிகளுக்கான விஞ்ஞானிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்களா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்கு மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தினுடைய நோக்கம் மண் தன்மையை அறிந்து உயரின மரங்களை உருவாக்குவது, தரம் தாழ்ந்த காடுகளைப் பசுமையாக்குவது, மக்களுடைய தேவைகளை அறிந்து அதிக விளைச்சல் தரக்கூடிய மரங்களை உருவாக்குவது ஆகியவை முக்கியமான லட்சியங்கள் ஆகும். இந்த அடிப்படையில் இந்த ஆராய்ச்சி மையம் செம்மையாகச் செயல்படுவதன் மூலமாக நம்முடைய நாட்டில் பசுமை நிறைந்த ஒரு வனச் சோலை உருவாகும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு ஜப்பான், அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளுடைய நிதி உதவிகளைக் கோருவதற்காக அரசினிடம் ஒரு கருத்துரு இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 536, திரு. வே. பெரியசாமி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

TRUTH ALONE TRIUMPHS

536—

அந்தியூர் அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துதல்

*2144—திரு. வே. பெரியசாமி:

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அந்தியூர் அரசினர் மேல்நிலைப் பள்ளி விளையாட்டு மைதானத்தில் ஒரு ஏக்கர் நிலத்தினை அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்குக் கொடுத்து, பெண்கள் பள்ளியை அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆணை பிறப்பிக்குமா?

1994 மே 5]

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே தற்போதைக்கு வாய்ப்பு இல்லை.

திரு. வே. பெரியசாமி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னடமும், களிதெலுங்கும், கவின் மலையாளமும், தென் துளுவும் தமிழிலே இருந்து தோன்றியவை என்று நாடகப் பேராசிரியர் மனோன்மணியம் சுந்தரம் பிள்ளை அவர்கள் கூறியிருக்கிறார்கள். அந்தத் தமிழைத் தான், தங்கத் தமிழைத்தான் இதற்குமுன் இரண்டாண்டு காலம் ஆட்சியிலிருந்தவர்கள் காலில் போட்டு மிதித்து மண்ணிலே போட்டுத் தள்ளிவிட்டார்கள். அந்தத் தூய தமிழை அரியணையிலே அமர்த்த இன்றைக்கு தஞ்சையிலே 1995-ல் 8-வது உலகத் தமிழ் மாநாடு காண இருக்கும் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொன்னான ஆட்சியில் பெரியார் மாவட்டத்தில் உள்ள அந்தியூர் தொகுதியில் அரசினர் மேல்நிலைப் பள்ளியில் பெரிய விளையாட்டு மைதானம் இருக்கிறது, அதில் பாதி இடம் காலியாக இருக்கிறது. அரசினர் பெண்கள் உயர்நிலைப் பள்ளியும் அருகிலே இருக்கிறது. அந்த உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்றுவதற்கு பலமுறை நான் கேள்விகளைக் கொடுத்துள்ளேன், 5 ஆண்டுகளாகக் கொடுத்துள்ளேன், அந்த ஆண்கள் பள்ளியில் அதிகமான மாணவர்கள் பயின்று கொண்டிருக்கிறார்கள். கடந்த காலத்தில் என்னுடைய பகுதிக்கு ஏராளமான ஆரம்பப் பள்ளிகள் அதாவது தக்கடை, பஜிலெட்டி மடம், கல்வாரை, செங்குளம் போன்ற 11 பள்ளிகளை வழங்கியிருக்கின்ற இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பாதத்தைத் தொட்டுக் கேட்கிறேன். இந்த ஆண்டு ஒரு ஏக்கர் நிலத்தை எடுத்து அந்த உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக ஆக்கித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதை மேல் நிலைப் பள்ளியாக ஆக்குவதற்கு வேண்டிய அனைத்து வசதிகளையும் செய்ய நாங்கள் காத்திருக்கிறோம். அருள் கூர்ந்து ஆவன செய்வார்களா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் அதிகமான இடம் இருக்குமானால், மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்தை அரசு பரிசீலிக்கும். அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துவதற்கு நிபந்தனைகளை உறுப்பினர் அவர்கள் முழுமையாக நிறைவேற்றி கருத்துரு அனுப்புவாரானால் நிதிநிலையின் அடிப்படையிலும், தகுதியின் அடிப்படையிலும் அரசு அதை ஆராயும்.

[1994 மே 5

திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1994ம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டில் நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் வீரம் மிக்க, உணர்ச்சியைக் கிளரும் உரையில், மாநிலங்கள் முன்னுரிமையின் அடிப்படையில் மேற்கொள்ள வேண்டிய பணிகள் பற்றி மிகச் சிறப்பாக குறிப்பிட்டிருந்தார்கள். 1998-ல் நமது தமிழ்நாடு, இந்தியாவில் வேறு எந்த மாநிலங்களிலும் இல்லாத அளவிற்கு அனைவருக்கும் கல்வி வழங்கப்படும் என்று தெரிவித்து ஏறத்தாழ பெரிய ஒரு திட்டத்தைக் கொண்டுவந்து இன்றைக்கு 2000.46 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள். இந்த ஆண்டில் அந்தப் பள்ளிக்கூடத்தை உருவாக்க அனைத்து நடைமுறைகளையும், சட்ட திட்டத்திற்கு உட்பட்டு நீங்கள் சொல்லுகின்ற தேவைகளை எல்லாம் நாங்கள் செய்து வைத்திருக்கிறோம். ஆனால் அந்த ஒரு ஏக்கர் நிலத்தை அரசு வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-15

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரும் நிலம் பற்றிய பிரச்சினையை நிச்சயமாக ஆய்வு செய்யும். ஆனால் அரசு மேல்நிலைப் பள்ளியாக அதை உயர்த்துவதற்கு பகுதி-2 திட்டத்தில் தான் நிதி ஒதுக்கீடு இருக்கிறது. நிதியின் அடிப்படையில் அது ஆராயப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 537, **டாக்டர்** ஜெய்சன் ஜேக்கப், மாண்புமிகு கல்வி **அமைச்சர்.**

537—

ஆரணி தொகுதி, ரகுநாதபுரத்தில் அரசு உயர்நிலைப் பள்ளி ஏற்படுத்துதல்

*21757—டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்:

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆரணி தொகுதி, ரகுநாதபுரம் கிராமத்தில் அரசு உயர்நிலைப் பள்ளி ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?